# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 29, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மேக்கேதாட்டு அணை விவகாரத்தில் பிரதமர் தலையிட வேண்டும் என்று முதல்வர் ஜோசப் விஜய் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் விஜய் செவ்வாய்க்கி ழமை எழுதிய கடித விவரம்:

 i. காவிரி நதியின் குறுக்கே கட்டுமானத்தை மேற்கொள்ள தமிழகம், கேரளம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் என கடந்த 2018- இல் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் எந்தக் குறிப்பும் இடம்பெறவில்லை' என்று நாடாளுமன்றத்தில் மத்திய ஜல் சக்தித் துறை இணையமைச்சர் ராஜ் பூஷண் சௌதரி எழுத்துபூர்வமாக பதிலளித்திருந்தார்.

 ii. இதற்கு தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளன. காவிரி விவகாரத்தில் கர்நாடக மாநில முதல்வர் டி.கே.சிவகுமாரை தமிழக முதல்வர் ஜோசப் விஜய் சந்திக்க நேரம் கோரியிருந்த நிலையில், மத்திய இணையமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

 iii. இந்நிலையில், மாநிலங்களுக்கு இடையேயான நீர்ப் பங்கீடு பிரச்னையில் சட்டப்படி தீர்க்கப்பட்ட விவகாரத்தில் மத்திய இணையமைச்சர் ராஜ்பூஷண் தெரிவித்த பதிலைத் திரும்பப் பெற வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் விஜய் செவ்வாய்க்கிழமை கடிதம் எழுதியுள்ளார். அதன் விவரம்:

   - வட கர்நாடகத்தில் அமைந்துள்ள அலமாட்டி அணை நீர்ப் பங்கீட்டு பிரச்னை வழக்கில் கீழ்பாசன வசதி பெறும் ஆந்திரம் உள்ளிட்ட மாநிலங்களின் அனுமதி இல்லாமல் அணையின் உயரத்தைக் கூட்டக் கூடாது என உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு அளித்துள்ளது.
   - இதேபோல், கேரளத்தின் பம்பாறு நீர் மின் திட்டத்திலும் தமிழகமும் கேரளமும் இணைந்து கீழ்பாசன விவசாயிகள் பாதிக்காதபடி நீர் திறப்பை மேற்கொள்ள வேண்டும் என்று நடுவர் மன்றம் உத்தரவிட்டுள்ளது.
   - கீழ்பாசன விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில், நடுவர்மன்ற உத்தரவின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் ஒழுங்குமுறை

ஆணையத்துடன் ஆலோசனை நடத்தி ஒருமித்த ஒப்பந்தத்தின்படி செயல்பட வேண்டும் என்றும், காவிரி நீரைத் தடுக்கும் எந்த ஒரு திட்டமும் நடுவர்மன்ற உத்தரவுக்கு உள்பட்டது என்றும் உச்சநீதி மன்றம் இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

- ஆகையால், மேக்கேதாட்டு அணையைக் கட்டும் திட்டத்தில் வெறும் பொறியியல் திட்ட அறிக்கையை வைத்து முடிவு செய்யக் கூடாது. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மற்றும் 2018-இல் உச்சநீதிமன்றம் அளித்த இறுதித் தீர்ப்பு மற்றும் பாசன வசதி பெறும் கீழ்படுகை மாநிலங்களின் உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் சட்டப் பரிசீலனையை மத்திய அரசு செய்ய வேண்டும்.
- மேக்கேதாட்டு திட்டம் தொடர்பாக 2019-இல் கர்நாடக அரசு சமர்ப்பித்த விரிவான திட்ட அறிக்கையை, நடுவர் மன்ற உத்தரவை உறுதிப்படுத்த மத்திய நீர் ஆணையம் திருப்பி அனுப்பியது.
- இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மத்திய இணையமைச்சர் தெரிவித்ததை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும். மேலும், காவிரி நடுவர்மன்ற உத்தரவையும், உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் கருத்தில் கொள்ளாமல் இந்தத் திட்டத்துக்கு பூர்வாங்க அல்லது நிர்வாக அனுமதியை அளிக்கக் கூடாது.
- தொழில்நுட்பம் மற்றும் சட்டப் பரிசீலனையின் அடிப்படையில் இந்தத் திட்டத்துக்கு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கும்போது தமிழகம் உள்பட கீழ்பாசன விவசாயம் பெறும் மாநிலங்களின் கருத்தையும் கேட்க வேண்டும்.
- காவிரி நதி வெறும் நதியல்ல; தென் மாநிலங்களின் கோடிக்கணக்கான விவசாயிகள், குடிமக்களின் வாழ்வாதாரமாகும். மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர்ப் பங்கீடு விவகாரத்தில் அரசமைப்பு மீதான நம்பிக்கையை நிலைநாட்ட நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பை பாதுகாக்க வேண்டும்.
- நீதிமன்ற தீர்ப்புகளைச் செயல்படுத்துவது, கூட்டாட்சி ஒற்றுமை ஆகியவற்றின் நலனைக் கருத்தில்கொண்டு பிரதமர் மோடி இந்த விவகாரத்தில் தலையிட வேண்டும் என்று முதல்வர் விஜய் குறிப்பிட்டுள்ளார்.

2. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பிராந்தியத்தில் கடந்த திங்கள்கிழமை நடைபெற்ற பேரவைத் தேர்தலின் முதல்கட்ட வாக்குப்பதிவுக்கு இடையே ஏற்பட்ட வன்முறையில் 14 பேர் உயிரிழந்தனர்; பலர் காயம டைந்தனர்.

i. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் பேரவையில் மொத்தமுள்ள 53 இடங்களில் 8 நியமன இடங்கள் தவிர்த்து, மீதமுள்ள 45 இடங்களுக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல்கட்டமாக, 13 இடங்களுக்குக் கடந்த திங்கள்கிழமை வாக்குப்பதிவு நடைபெற்றது.

ii. பாகிஸ்தான் மத்திய அரசில் கூட்டணிக் கட்சிகளாக அங்கம் வகிக்கும் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் (பிஎம்எல்-என்) மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) இடையே இத்தேர்தலில் நேரடி போட்டி நிலவியது. முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பிடிஐ கட்சி இத்தேர்தலைப் புறக்கணித்தது குறிப்பிடத்தக்கது.

iii. தேர்தல் முடிவில், பிஎம்எல்-என் கட்சி 9 இடங்களையும், பிபிபி 4 இடங்களையும் வென்றன. இந்த முடிவுகளை ஏற்க மறுத்துள்ள பிபிபி, தேர்தலில் பெருமளவில் முறைகேடுகள் நடைபெற்றதாகவும், 7 இடங்களில் எங்களின் வெற்றி பிஎம்எல்-என் கட்சிக்குப் பரிசாக வழங்கப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியது. எனினும், பிரதமர் ஷாபாஸ் ஷெரீப்பின் ஆலோசகர் ராணா சனாவுல்லா இந்த முறைகேடு குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார். தேர்தல் பெரும்பாலும் அமைதியாகவும் நியாயமாகவும் நடைபெற்றதாக அவர் கூறினார்.

iv. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் நடைபெறும் இத்தேர்தலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

- இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் அளித்த பேட்டியில், 'தற்போதைய இந்த தேர்தல், பாகிஸ்தான் தனது சட்டவிரோத ஆக்கிரமிப்பினை மறைப்பதற்கும். அங்கு நடைபெறும் கடும் மனித உரிமை மீறல்களை மூடி மறைப்பதற்குமான ஒரு வீண் முயற்சியாகும்.
- ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்கள் முழுவதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதிகள் என்பது இந்தியாவின் தெளிவான, நிலையான நிலைப்பாடாகும். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் நடைபெறும் மக்கள் போராட்டங்கள், பாகிஸ்தானின் பொருளாதாரச் சுரண்டல் மற்றும் அடிப்படை உரிமைகள்

மறுக்கப்படுவதன் நேரடி விளைவே ஆகும்' என்றார்.

3. ஆசிய நாடுகளில் இயங்கி வரும் இணையவும் மோசடி மையங்களின் பணிகளுக்கு சட்டவிரோதமாக மனிதர்கள் கடத்தப்படுவது கணிசமாக அதிகரித்துள்ளதாக ஐ.நா.வின் சர்வதேச இடம் பெயர்வு அமைப்பு (ஐஓஎம்) எச்சரித்துள்ளது.

i. மியான்மர், கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகளில் மட்டும் சுமார் 3 லட்சம் பேர் இதுபோன்ற மோசடி மையங்களில் வலுக்கட்டாயமாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலைநாடுகளைச் சேர்ந்த முதியவர்களைக் குறிவைத்து இணைய வழியில் பணம் பறிக்கும் மோடிகளைச் செயல்படுத்த இந்த மையங்கள் இயங்கி வருகின்றன.

ii. சிறந்த ஆங்கிலப் புலமை மற்றும் கல்லூரிப் பட்டம் பெற்ற இளைஞர்களைக் கவரும் வகையில், சமூக வலைதளங்கள் மூலம் கவர்ச்சிகரமான போலி வேலைவாய்ப்பு விளம்பரங்களை இச்சட்டவிரோத கும்பல்கள் வெளியிடுகின்றன. பணிக்கச் சேர்ந்த பிறகு கடவுச்சிட்டை (பாஸ்போர்ட்) உள்ளிட்ட முக்கிய ஆவணங்களைப் பறிமுதல் செய்து, மிரட்டல்கள் மற்றும் வன்முறை மூலம் மோசடிப் பணிகளில் அவர்களை ஈடுபடச் செய்கின்றனர்.

iii. மேலும், இவ்வாறு பாதிக்கப்பட்ட பல நபர்கள் பாலியல் கொடுமைகள், தனிமைச் சிறை தண்டனை, உடல் ரீதியான தாக்குதல்கள் மற்றும் கடனாளிகளாக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டு, பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகி வருவதாக ஐ.நா. அமைப்புகவலை தெரிவித்துள்ளது.

iv. இதுகுறித்து அந்த அமைப்பின் தலைமை இயக்குநர் எமி போப் மேலும் கூறுகையில், '80-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் இதில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை 30 நாடுகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நாங்கள் உதவியுள்ளோம்.

v. மேலும், இந்த மையங்களில் இருந்து தப்பிக்கும் நபர்கள் சில நேரங்களில் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் அபாயமும் உள்ளது. பாதிக்கப்பட்ட நபர்களைப் பாதுகாப்பாக தாயகம் திருப்புவதோடு, அவர்களுக்கு முறையான மறுவாழ்வு அளிக்கவும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சர்வதேச நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்' என்று வேண்டுகோள் விடுக்கார்.

4. உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் சோனம் உத்தம் மஸ்கர், ஹிமான்ஷு தில்லன் இணை வெண்கலப் பதக்கம் வென்றது.
   i. சீனாவில் நடைபெறும் இப்போட்டியில், 10 மீட்டர் ஏர் ரைஃபிள் கலப்பு அணிகள் பிரிவில் சோனம், ஹிமான்ஷூ கூட்டணி 441.2 புள்ளிகளுடன் 3-ஆம் இடம் பிடித்து வெண்கலம் பெற்றது.

5. பளுத்தூக்குதலில் ஆடவர் 79 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் வல்லுரி அஜயபாபு வெள்ளிப் பதக்கம் வென்றார்.
   i. ஸ்னாட்ச் பிரிவில் 149 கிலோ, கிளீன் & ஜெர்க் பிரிவில் 181 கிலோ என, மொத்தமாக அவர் 330 கிலோ எடையைத் தூக்கி 2-ஆம் இடம் பிடித்தார். இதில் ஸ்னாட்ச் பிரிவில் அவர் தூக்கிய எடை, காமன்வெல்த் போட்டி சாதனையாகும்.

6. ஆடவர் உயரம் தாண்டுதலில் இந்தியாவின் சர்வேஷ் அனில் குஷாரே வெள்ளிப் பதக்கம் வென்றார். காமன்வெல்த் போட்டியில் உயரம் தாண்டுதலில் வெள்ளி வென்ற முதல் இந்தியராக அவர் பெருமை பெற்றார்.
   i. காமன்வெல்த் உயரம் தாண்டு தலில் இதற்கு முன் தேஜஸ்வின் சங்கர் வெண்கலம் (2022 பர் மிங்ஹாம்) வென்றதே அதிகபட்சமாக இருந்த நிலையில், தற்போது சர்வேஷ் குஷாரே அதை வெள்ளியாக அதிகரித்து அசத்தியிருக்கிறார். அதையும் அவர் தனது அறிமுக காமன்வெல்த் போட்டியிலேயே வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

7. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், பாரா மகளிர் குண்டு எறிதலில் இந்தியாவின் ஷர்மிளா தங்கப் பதக்கம் வென்றார். காமன்வெல்த் வரலாற்றில் தங்கம் வென்ற, இந்தியாவின் முதல் பாரா தடகள போட்டியாளராக அவர் வரலாறு படைத்தார். அதேபோல், ஆடவர் உயரம் தாண்டுதலில் இந்தியாவுக்காக காமன்வெல்த் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் வீரராக சர்வேஷ் அனில் குஷாரே பெருமை பெற்றார். மறுபுறம், வல்லுரி அஜயபாபு வென்ற வெள்ளி, நடப்பு காமன்வெல்த் பளுதூக்குதலில் இந்தியாவின் ஆதிக்கம் தொடரும் வகையில், 6-ஆவது பதக்கமாக அமைந்தது.

8. உள்நாட்டு தேவை அதிகரிப்பால், யூரியா இறக்குமதி 83 சதவீதமும், டை அமோனியம் பாஸ்பேட் (டிஏபி) இறக்குமதி 36 சதவீதமும் அதிகரித்துள்ளதாக,

மத்திய அரசு தெரிவித்தது.

9. இந்திய விவசாய ஏற்றுமதிப் பொருட்களின் தரம் குறித்த கவலைகள் மற்றும் சர்வதேச சந்தைகளால் அவை அடிக்கடி நிராகரிக்கப்படுதல்.

i. இந்தியாவின் விவசாய உற்பத்தி மற்றும் ஏற்றுமதி இலக்குகள்

- பருப்பு வகைகள், கிராம்பு, ஏலக்காய், மிளகு மற்றும் பால் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முன்னணியில் உள்ளது.
- அரிசி, கோதுமை, பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் இரண்டாம் இடத்தில் உள்ளது.
- 2024–25 ஆம் ஆண்டில், இந்தியாவின் தானிய உற்பத்தி சாதனை அளவாக 357.7 மில்லியன் டன்னாக உயர்ந்தது.
- விவசாய ஏற்றுமதி 2019–20 இல் 34.5 பில்லியன் டாலராக இருந்த நிலையில், 2024–25 இல் 51.1 பில்லியன் டாலராக அதிகரித்தது.
- 2030-ஆம் ஆண்டிற்குள் விவசாய ஏற்றுமதியை 100 பில்லியன் டாலராக உயர்த்த மத்திய அரசு ஒரு லட்சிய இலக்கை நிர்ணயித்துள்ளது.

ii. சமீபத்திய உலகளாவிய நிராகரிப்புகள் மற்றும் குறிப்பிட்ட நிகழ்வுகள்

- ஜப்பான்: ஏற்றுமதிக்கு முன் முறையாகப் பதப்படுத்தப்படாத (பூச்சிக் கட்டுப்பாடு அல்லது நீண்ட காலம் கெடாமல் இருப்பதற்கான செயல்முறைகள் மேற்கொள்ளப்படாத) காரணத்தினால், இந்திய மாம்பழங்களின் சரக்குத் தொகுப்பு ஒன்றை ஜப்பான் சமீபத்தில் நிராகரித்தது.
- சீனா: நரம்பியல் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய 'மெத்திடாத்தியன்' (Methidathion) எனும் ஆர்கனோபாஸ்பேட் பூச்சிக்கொல்லியின் எச்சங்கள் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியப் பச்சை மிளகாயை சீனா நிராகரித்தது.
- மசாலாப் பொருட்கள் மீதான தடைகள்: புற்றுநோயை உண்டாக்கக்கூடிய வேதிப்பொருளான 'எத்திலீன் ஆக்சைடு' (ETO) இருந்ததால், 2024-ஆம் ஆண்டில் ஐந்து நாடுகள் பல்வேறு இந்திய மசாலா கலவைகளுக்குத் தடை விதித்தன.

iii. ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) வர்த்தகப் புள்ளிவிவரங்கள் மற்றும் சவால்கள்

- இந்தியாவின் மொத்த விவசாய ஏற்றுமதியில் சுமார் 12% ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது.

- 2020 மற்றும் 2026-க்கு இடைப்பட்ட காலத்தில், மொத்தம் 2,028 இந்திய ஏற்றுமதி சரக்குத் தொகுப்புகள் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளால் "ஆபத்தானவை" அல்லது "அபாயகரமானவை" என வகைப்படுத்தப்பட்டன.
- சரக்குத் தொகுப்புகளின் நிலை:

1. 1,001 சரக்குத் தொகுப்புகள் ஐரோப்பிய ஒன்றியத் துறைமுகங்களில் இறக்க அனுமதிக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டன.
2. 608 சரக்குத் தொகுப்புகள் முறைப்படியான எச்சரிக்கைகளுடன் மட்டுமே நாட்டிற்குள் நுழைய அனுமதிக்கப்பட்டன.
3. முக்கியக் கலப்படங்கள்/மாசுக்கள்: சிக்கலுக்குள்ளான பொருட்களில் சுமார் 50% மூலிகைகள் மற்றும் மசாலாப் பொருட்களாகும். குறிப்பாக, 507 சரக்குத் தொகுப்புகளில் அதிகப்படியான எத்திலீன் ஆக்சைடும், 136 சரக்குத் தொகுப்புகளில் 'அஃப்லாடாக்சின்' (Aflatoxin) எனும் நச்சுப் பொருளும் காணப்பட்டன. (iv) சர்வதேச பாதுகாப்புத் தரநிலைகளில் உள்ள முரண்பாடுகள்

- வேதிப்பொருட்களுக்கான அதிகபட்ச எஞ்சிய அளவு (MRL) வரம்புகள் நாடுகளுக்கு இடையே மாறுபடுகின்றன.
- ஐரோப்பிய ஒன்றியத்தில் 1991-லேயே 'எத்திலீன் ஆக்சைடு' (Ethylene Oxide) பயன்பாடு தடை செய்யப்பட்டது; ஆனால் இந்தியாவில் இன்னும் 0.1 மி.கி வரையிலான பூச்சிக்கொல்லி அளவு அனுமதிக்கப்படுகிறது.
- சில சந்தர்ப்பங்களில், ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் காணப்படும் வேதிப்பொருட்கள் இந்தியாவில் பயன்பாட்டிற்காக முறையாகப் பதிவு கூட செய்யப்படாதவையாக உள்ளன; இருப்பினும், அவற்றில் அந்த வேதிப்பொருட்களின் எச்சங்கள் காணப்படுகின்றன.

iv. அடிப்படை காரணங்கள் மற்றும் கட்டமைப்பு குறைபாடுகள்

- பொருட்களின் பாதுகாப்பைச் சரிபார்க்க, 'வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால்' (APEDA) சான்றளிக்கப்பட்ட போதுமான எண்ணிக்கையிலான பரிசோதனைக்கூடங்கள் இந்தியாவில் இல்லை.
- சர்வதேச பாதுகாப்புத் தரநிலைகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் முறையான பயிற்சி இல்லாததால், விவசாயிகள் பெரும்பாலும் அதிகப்படியான பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துகின்றனர்.

- உலகளாவிய தரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, அறுவடைக்குப் பிந்தைய கையாளுதல் மற்றும் உள்நாட்டுப் பதப்படுத்துதல் தொழில்நுட்பங்களை நவீனமயமாக்குவது அவசியமாகும்.

v. முடிவு மற்றும் பரிந்துரைகள்

இந்தியா தன்னிறைவு மற்றும் சாதனை அளவிலான உற்பத்தியை எட்டியிருந்தாலும், அப்பொருட்கள் பாதுகாப்பற்றவை எனக் கருதப்பட்டால் அந்தச் சாதனைகள் அர்த்தமற்றதாகிவிடும். மனித ஆரோக்கியம் மற்றும் நாட்டின் நற்பெயரைப் பாதுகாக்க, ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைக்கான வேளாண் பொருட்கள் மிக உயர்ந்த தரத்துடனும், நச்சுத்தன்மை வாய்ந்த வேதிப்பொருள் எச்சங்கள் இல்லாமலும் இருக்க வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.